களத்தில் இருந்தே பேசுகிறேன் தாய் நிலத்தில் இருந்தே பேசுகிறேன்
விடுதலை வெறியில் தலைவரின் நெறியில் மரணத்தின் வயலில்
பகை உழுதபடியே பேசுகிறேன்

நண்பா நண்பா நலம் தானா நம்மவர் எல்லாம் சுகம் தானா 2
உங்கள் வியர்வையும் எங்கள் குருதியும் இணைந்தால் ஈழம் மீட்கலாம் 2
நமது வானில் நமது நிலவை நமது மண்ணில் நின்ற படியே பார்க்கலாம்
நின்ற படியே பார்க்கலாம்

நண்பா நண்பா நலம் தானா

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

நா நானே நானே நா 2
நானே நானே நானேநா 2

தொலை தூரம் சென்றாலும் துயர் நூறு என்றாலும்
தாய் மண்ணை மறக்காமல் சேய் சொந்தம் இழக்காமல்
பனி கொட்டும் குளிரினிலும் உயிர் வெட்டு பசியினிலும்
கதவு தட்டும் ஒலிகேட்டு கனிவுடன் வரவேற்று
அள்ளி அள்ளி தந்துதான் வெற்றிதளாச்சு நம்
புலம் பெயர்ந்தோர் உதவிகளும் களச்செயலாச்சு 2

சுகம் விட்டு சேர்த்தகாசு கருவிகளை நீட்டுதே
வடை சுட்டு தந்த காசும் பகை சுட்டு வீழ்த்துதே

நண்பா நண்பா நலம் தானா

கடும் வேலை என்றாலும் மிகை நேரம் உழைத்தாலும்
மண்மீட்பை மறக்காமல் இனமானம் இழக்காமல்
மழை கொட்டும் இரவினிலும் மலைச்சிகர நுனியிலும்
கதவு தட்டும் ஒலிகேட்டு கனிவுடன் வரவேற்று
அள்ளி அள்ளி தந்துதான் வெற்றிதளாச்சு நம்
புலம் பெயர்ந்தோர் உதவிகளும் களச்செயலாச்சு 2

நகை கழற்றி தந்த தொகை பகை விரட்ட பாயுதே
இடம் பெயர்ந்த உறவுகளின் பசிவிரட்டப் போகுதே

நண்பா நண்பா நலம் தானா நம்மவர் எல்லாம் சுகம் தானா 2
உங்கள் வியர்வையும் எங்கள் குருதியும் இணைந்தால் ஈழம் மீட்கலாம் 2
நமது நாட்டில் நமது நாளில் நமது தலைவன் புலிக்கொடி ஏற்றப்பார்க்கலாம்
புலிக்கொடி ஏற்றப்பார்க்கலாம்

நண்பா நண்பா நலம் தானா